### தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு

# அகில இந்திய ஓ.பி.சி. மாணவர் கூட்டமைப்பு நன்றி!

சென்னை, மே 6 -

பெரியார் வழியில் சமூக நீதியை நிலைநிறுத்தி வருபவர் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்று அகில இந்திய ஓ.பி.சி. மாணவர் கூட்டமைப்பு பாராட்டு தெரிவித்துள்ளது.

அகில இந்திய ஓ.பி.சி. மாணவர் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:-

தமிழ்நாட்டில் இதர பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறைவேற்றிய திட்டங்கள் ஏராளம் என்று பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதர பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகளின் உரிமைகளை பாதுகாத்தவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்றும், யு.ஜி.சி. கொண்டு வந்த சமூக சமத்துவ விதிமுறைகளுக்காக தேசிய அளவில் குரல் எழுப்பிய முதல் தலைவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை முன்னெடுத்துச் சென்றவர் என்றும், மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான ஆட்சி, கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தியது என்றும் அகில இந்திய ஓ.பி.சி. மாணவர் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான ஆட்சியின் நலத்திட்டங்கள், ஒட்டுமொத்த மனித மேம்பாட்டுக் குறியீடுகளை மேம்படுத்தியது.

69% இட ஒதுக்கீட்டுக் கொள்கையைத் தொடர்ந்து நிலைநிறுத்திப் பாதுகாத்து, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினருக்கு பரந்த சமூக நீதியையும், பிரதிநிதித்துவத்தையும் உறுதி செய்துள்ளார்.

இட ஒதுக்கீட்டுக் கட்டமைப்புகளை நீர்த்துப் போகச் செய்யக்கூடிய ஒன்றிய அரசின் கொள்கைகளை எதிர்த்தும், கல்வி மற்றும் சமூக நீதிக் கொள்கைகளில் மாநில சுயாட்சியை வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பெரியார் போன்ற தலைவர்களின் சமூக நீதி மரபுக்கு மு.க.ஸ்டாலின் அவர்கள் அளிக்கும் முக்கியத்துவம், தமிழ்நாட்டில் கொள்கை திசையைத் தொடர்ந்து வடிவமைத்து, சமத்துவம் மற்றும் பிரதிநிதித்துவம் குறித்த உரையாடலைத் தீவிரமாக வைத்திருக்கிறது என்று அகில இந்திய ஓ.பி.சி. மாணவர் கூட்டமைப்பு பாராட்டு தெரிவித்துள்ளது.

### கள்ளக்குறிச்சி, ரிஷிவந்தியம், உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதிகளில்

# தேர்தலில் வாக்களித்தவர்களுக்கும் - வாக்களிக்க மறந்த மக்களுக்கும் நன்றி!

## மாவட்டச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தெரிவித்தார்!

கள்ளக்குறிச்சி, மே 6 -

கள்ளக்குறிச்சி, ரிஷிவந்தியம், உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் தேர்தலில் தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்கு வாக்களித்த மக்களுக்கும், வாக்களிக்க மறந்த மக்களுக்கும் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

இதுகுறித்து கள்ளகுறிச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் கூறுகையில் :

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தி.மு.க. சார்பில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. உதயசூரியன் சின்னத்தில் மூன்றாவது முறையாக போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் வசந்தம் க. கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மணலூர்பேட்டை பேரூராட்சி, ரிஷிவந்தியம் வடக்கு, தெற்கு, கிழக்கு ஒன்றியங்கள் மற்றும் சங்கராபுரம் வடக்கு ஒன்றியம், திருக்கோவிலூர் வடக்கு, தெற்கு, மேற்கு ஒன்றியங்களில் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டு உதயசூரியனுக்கு வாக்குகள் சேகரித்தார்.

இந்நிலையில் ஏப்ரல் 23ஆம் தேதி - திங்கள்கிழமை அன்று வாக்குப்பதிவு நடைபெற்றது. மே 4ஆம் தேதி திங்கள்கிழமை அன்று வாக்கு என்னும் பணி நடைபெற்றது.

இந்த வாக்குப்பதிவில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட எனக்கு வாக்களிக்க உழைத்த மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவருக்கும், அதேபோல் தேர்தலில் வாக்களித்த, வாக்களிக்க மறந்த மக்களுக்கும் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தனது நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

இதேபோல் உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்ட ஜி.ஆர்.வசந்தவேல் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

கள்ளக்குறிச்சி (தனி) சட்டமன்றத் தொகுதியில் வி.சி.க. சார்பில் முனைவர் கு.மாலதி பானை சின்னத்தில் போட்டியிட்டு சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் ஜி.ஆர்.வசந்தவேலுக்கு கள்ளக்குறிச்சி (தனி) சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் முனைவர் கு.மாலதிக்கு வாக்களிக்க உழைத்த கழக நிர்வாகிகள் அனைவருக்கும், அதேபோல் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும், தேர்தலில் வாக்களித்த, வாக்களிக்க மறந்த மக்களுக்கும் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பிலும் எனது சார்பிலும் மனமார்ந்த நன்றியினை தெரி வித்துக் கொள்வதாக தெற்கு மாவட்டச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தென்காசி மாவட்டத்தில் 5 சட்டமன்றத் தொகுதிகளில் 4 சட்டமன்றத் தொகுதிகளை

# தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கைப்பற்றியது!

## தென்காசி தொகுதி கழக வேட்பாளர் கலை கதிரவன் 10,299 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி!

தென்காசி, மே 6 -

தென்காசி மாவட்டத்தில் உள்ள 5 சட்டமன்றத் தொகுதிகளில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி 4 இடங்களை கைப்பற்றியது. அதாவது தென்காசி மாவட்டத்தில் தென்காசி, ஆலங்குளம், வாசுதேவநல்லூர், கடையநல்லூர், சங்கரன்கோவில் ஆகிய 5 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. இதில் தென்காசி, ஆலங்குளம் வாசுதேவநல்லூர் ஆகிய சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க.வும், கடையநல்லூர் தொகுதியில் ம.தி.மு.க.வும், சங்கரன்கோவில் தொகுதியில் காங்கிரசும் போட்டியிட்டது. தென்காசி தொகுதி கழக வேட்பாளர் மருத்துவர் கலை கதிரவன் 10,299 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இதில் தென்காசி சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் மருத்துவர் கலை கதிரவனும், ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க.வேட்பாளர் பி.ஹெச்.பி.மனோஜ் பாண்டியனும், வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளரும், கழக வேட்பாளருமான ஈ.ராஜா எம்.எல்.ஏ.வும் வெற்றி பெற்றனர்.

கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி ம.தி.மு.க.வேட்பாளர் தி.மு.ராஜேந்திரன் உதயசூரியன் சின்னத்தில் நின்று வெற்றி பெற்றார். சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி காங்கிரஸ் கட்சி வேட்பாளர் சங்கை கணேசன் தோல்வி அடைந்தார். இதில் தென்காசி, ஆலங்குளம், வாசுதேவநல்லூர், கடையநல்லூர் ஆகிய தொகுதிகளில் த.வெ.க. 3 வது இடமும், சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதியில் 2 வது இடமும் பெற்றுள்ளது. தென்காசி மாவட்டத்தில் உள்ள 5 சட்டமன்றத் தொகுதிகளில் ஒரு தொகுதியில் கூட த.வெ.க வெற்றி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தென்காசி மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றி பெற்ற வேட்பாளர்கள் வாக்கு விவரம் வருமாறு:-

தென்காசி சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் கலை கதிரவன் வெற்றி பெற்றார். அவர் பெற்ற வாக்கு 79,699,

2 வது அ.தி.மு.க. வேட்பாளர் செல்வ மோகன் தாஸ் பாண்டியன் 69,400 வாக்கு களும்,3 வது த.வெ.க.வேட்பாளர் ராஜ பிரகாஷ் 55,543 வாக்கு களும் பெற்றார்.இதில் தி.மு.க. வேட்பாளர் டாக்டர். கலை கதிரவன் 10,299 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் பி.எச்.பி.மனோஜ் பாண்டியன் வெற்றி பெற்றார். அவர் பெற்ற வாக்கு 69,170, 2 வது அ.தி.மு.க. வேட்பாளர் கே.ஆர்.பி.பிரபாகரன் 61,372 வாக்குகளும், 3 வது த.வெ.க. வேட்பாளர் விபின் சக்கரவர்த்தி 60,684 வாக்குகள் பெற்றார். இதில் தி.மு.க.வேட்பாளர் மனோஜ் பாண்டியன் 7,798 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளரும் தி.மு.க. வேட்பாளருமான ஈ.ராஜா எம்.எல்.ஏ. வெற்றி பெற்றார். அவர் பெற்ற வாக்கு 63,045, 2 வது பா.ஜ.க.

வேட்பாளர் ஆனந்தன் அய்யாசாமி 56,462, வாக்குகளும்,3 வது த.வெ.க. வேட்பாளர் அமுதா ராணி 45,862 வாக்கும் பெற்றார்.

இதில் தி.மு.க. வேட்பாளர் ஈ.ராஜா 6,583 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். தற்போது வாசுதேவநல்லூர் தொகுதியில் வெற்றி பெற்றுள்ள ஈ.ராஜா கடந்த 2021 ஆம் ஆண்டு தேர்தலில் சங்கரன்கோவில் தொகுதியில் (தி.மு.க.) போட்டியிட்டு வெற்றி பெற்றவர் ஆவார்.

கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி ம.தி.மு.க. வேட்பாளர் தி.மு. ராஜேந்திரன் உதயசூரியன் சின்னத்தில் நின்று வெற்றி பெற்றார். அவர் பெற்ற வாக்கு 79,832, 2 வது அ.தி.மு.க.வேட்பாளர் கிருஷ்ண முரளி 73,579 வாக்குகளும்,

3 வது த.வெ.க. வேட்பாளர் ஜலீல் 49,254 வாக்குகளும் பெற்றார். இதில் ம.தி.மு.க. வேட்பாளர் தி.மு.ராஜேந்திரன் 6,253 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

சங்கரன்கோவில் தொகுதியில் காங்கிரஸ் கட்சி தோல்வியை தழுவியது.

நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் வேட்பாளர்களை கழக நிர்வாகிகள், தொண்டர்கள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராணி அண்ணா
### மே 6 (1996)



பேரறிஞர் அண்ணா அவர்களின் துணைவியாரும் ‘அண்ணியார்’ என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்டவரும்; அண்ணா அவர்களின் பொதுவாழ்க்கைக்கு பெரிதும் உறுதுணையாக இருந்தவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் ராணி அம்மையார் அவர்களை தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராக்கினார்.


**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



நாகர்கோவில் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்ற கழக துணை அமைப்புச் செயலாளர் ஆஸ்டினுக்கு நாகர்கோவில் மாநகராட்சி மேயர் (பொ) மேரி பிரின்சி லதா தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. உடன் மாநகரச் செயலாளர் வக்கீல் ஆனந்த் மற்றும் கழக கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாகை ஆர்.ஜி. பக்கிரிசாமி
### மே 6 (2024)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரால் ஈர்க்கப்பட்டு, சிறுவயது முதலே திராவிட இயக்கத்தில் பற்றுடையவராகவும், தஞ்சை டெல்டா மாவட்டத்தில் திராவிட சுயமரியாதை உணர்வோடு கழகத்தின் வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

ஒருங்கிணைந்த நாகை மாவட்டத்தில் மாவட்ட விவசாய அணி துணைத் தலைவர் – நாகை ஒன்றிய பொறுப்பாளர் – ஒன்றிய துணை செயலாளர் – ஊராட்சி செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.


விவசாயம் சங்க தலைவர், ஊராட்சி மன்ற தலைவராகவும் பல ஆண்டுகள் சிறப்பாக பணி செய்தவர்.

தலைமைக் கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா எஸ்.பி.தங்கையா
### மே 6 (2014)



நாகை மாவட்டக் கழக முன்னோடி, தலைமைச் செயற்குழு உறுப்பினர், நாகை ஒன்றியச் செயலாளராக 20 ஆண்டுகள் சிறப்பாக பணியாற்றியவர்.

நாகை மாவட்ட துணைச் செயலாளர், மாவட்டப் பொறுப்பாளர், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் உள்ளிட்ட கழகப் பொறுப்புகளை ஏற்று திறம்பட பணியாற்றியவர்.

சின்னத்தும்பூர் ஊராட்சி மன்றத் தலைவராக நான்கு முறையும், நாகை ஒன்றிய பெருந்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் நலப்பணிகளை மேற்கொண்டவர்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா கைதியாக ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர். அதுமட்டுமல்லாமல் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

கழகத் தோழர்களால் அன்பாக ‘எஸ்பிடி’ என அழைக்கப்பட்டவர். தலைவர் கலைஞர் அவர்களால் ‘வேளாங்கண்ணி தங்கையா’ என அழைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**